பல்லவி (எடுப்பு)

யாரையும் நம்பாதே! எவரையும் நம்பாதே! எதுலேயும் நம்பாதே!!
நிம்மதியில்லாத வாழ்க்கையின்னு நெஞ்சை நிமிர்த்தி சொல்லாதே!
குனிய வெச்சு குத்திவிட்டு குதூகலிக்கும் அந்த உறவுதானுங்க!

சரணம் (தொடுப்பு)

ஏறிவந்த ஏணியையும் அது கீழே தள்ளி விடுங்க!
ஏன்னு கேட்டா நம்ம அறிவுத்தானே குழம்பிப் போகுங்க!

முதுகுலே குத்து பட்டா நிமிர முடியாது!
மூளையிலே குத்து பட்டா அழவும் தெரியாது!

வீணாய்ப் பேசும் வேதனையிலே வெந்து மனம் நோகுமே!
தானாய்ப் போக விட்டுவிட்டு தவிப்பில்லாமல் வாழுவோம்!

ஆனால் என்று அழுத்தம் கொடுத்து நிக்காதே!
மனம் வீணாய் அழுதால் உடல்நலம் கெட்டுப் போகுமே!

(முடிப்பு)

வானில் என்ன மண்ணில் என்ன வாழ்க்கைதானே ஓடுது!
தூனாய் நின்று அறிவைத் துலக்கி வெச்சி வாழுவோம்!
- கவிவளவன் 31-12-2022 (03.15 PM)